நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி. சி.எண்.59/2020**

2022ம்ஆண்டு பிப்ரவரி திங்கள் 9ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **சத்யா** | **வயது** | : | **52** |
| **க/பெ.** | : **நடராஜன்** | **தொழில்** | : | **கூலி** |
| **ஊர்** | : **பூசாரியூர்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **நாட்றம்பள்ளி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.கூலி வேலை செய்கிறேன்.வழக்கின் எதிரியை தெரியும். (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை) அவர் எனது மகள் நித்யாவின் மூத்தார் ஆகும்.கடந்த 12.05.2019ம்தேதி எனது மகளின் மாமனார் இறந்துவிட்டதால் அவரது திவசத்திற்கு சென்றிருந்தேன். அன்றைய தினம் மதியம் 03.00மணியளவில் எனது மகள் நித்யாவிடம் எதிரி சண்டையிட்டு கொண்டிருந்தார். மேலும் எனது மகளை அடித்தார். நான் சண்டையை விலக்க சென்றேன்.அப்போது என்னை அனாவசியமாக திட்டினார். தேவிடியா என திட்டினார்.மேலும் காய் நறுக்கும் கத்தியால் எனது தலையின் மீது தாக்கிவிட்டார். நீ என்ன அவளுக்கு சப்போட்டா என கேட்டார்.மேற்படி சம்பவங்கள் எனது மகளின் வீட்டிற்கு வெளியே முன்புறமாக நடந்தது. எதிரி கத்தியால் தாக்கியதால் எனக்கு மயக்கம் வந்தது.திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு வந்து சேர்த்தார்கள். போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து எழுதிக்கொண்டார்கள். நான் அதில் கையொப்பம் போட்டேன். புகார்வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆகும். எதிரி என்னை தாக்கியகத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காட்டப்படும் கத்தியால் தான் எதிரி என்னை தாக்கினார். காய் நறுக்கும் இரும்பு கைப்பிடிக்கொண்ட கத்தி ஒன்று சா.பொ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.1ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம

**சி. சி.எண்.59/2020**

2022ம்ஆண்டு பிப்ரவரி திங்கள் 9ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **நித்யா** | **வயது** | : | **29** |
| **க/பெ.** | : **நாராயணன்** | **தொழில்** | : | **இல்லதரசி** |
| **ஊர்** | : **பதிபள்ளம் பூசாரியூர்** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **நாட்றம்பள்ளி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **திருப்பத்தூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் பதிபள்ளம் பூசாரியூர் கிராமத்தில் வசிக்கிறேன்.இல்லதரசியாக உள்ளேன். அ.சா.1 எனது தாயார். வழக்கின் எதிரியை தெரியும். (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை) அவர் எனது மூத்தார் ஆகும்.கடந்த 12.05.2019ம்தேதி எனது மாமனாருக்கு எங்கள் வீட்டில் திவசம் வைத்திருந்தோம்.அ.சா.1 எனது அம்மாவை அழைத்திருந்தேன். அவர் வந்திருந்தார். அன்றையதினம் மதியம் 03.00 மணியளவில் எதிரி மது அருந்திவிட்டு எங்கள் வீட்டின் அருகே வந்து அசிங்கமாக என்னை திட்டினார். அவர் அடிக்கடி அதுப்போல் தான் எங்கள் வீட்டின் அருகேவந்து திட்டுவார். எனது வீட்டின் அருகே இருந்த எங்களது மாட்டை அவர் பிடித்துசென்றார். நான் மீண்டும் அவரிடம் சென்று எங்கள் மாட்டை பிடிக்க சென்றேன். அப்போது எதிரி என்னை அடித்துவிட்டார். என்னை கையால் தாக்கினார். அப்போது எனது அம்மாவும் தங்கையும் அங்கு வந்தார்கள். சண்டையை விலக்கிவிட்டார்கள். எதிரி எனது அம்மாவை பார்த்து அசிங்கமாக திட்டி நீ என்ன அவளுக்கு சப்போட்டா என கேட்டார். மேலும் எதிரி அவரது வீட்டிற்கு சென்று காய் நறுக்கும் கத்தியை கொண்டு வந்து எனது தலையின் மீது தாக்க வந்தார். அப்போது எனது அம்மா தடுப்பதற்காக வந்தார். அவரது தலையில் தாக்கி காயம் ஏற்படுத்தினார். எனது அம்மாவிற்கு தலையில் ரத்தம் வந்து மயங்கிவிட்டார். நாங்கள் மருத்துவமனைக்கு செல்ல தயரான போது, எதிரி என்னையும் அ.சா.1 எனது அம்மாவையும் பார்த்து உங்களை கொலை செய்யாமல் விடுவதில்லை என மிரட்டினார். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் எனது அம்மாவை சிகிச்சைக்கு சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்யப்படாததால் அ.சா.2ன் சாட்சியம் நிறைவு செய்யப்படுகிறது.